**மத்திய செயற்குழு (CEC) அறிக்கை 2026**

**கட்சியின் நிலவரம்**

கட்சி மிக வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, கட்சியில் தற்போது 198,827 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும், 768 உறுப்பினர் விண்ணப்பங்கள் இன்னும் அங்கீகாரப் பரிசீலனையில் உள்ளன. கட்சிக்கு தற்போது 2,236 கிளைகள் உள்ளன.

16-ஆவது பொதுத் தேர்தல் முடிவடையும் வரை புதிய கிளைகளை நிறுவுவதற்குத் தற்காலிகத் தடை (moratorium) விதிக்க மத்திய செயற்குழு (CEC) முடிவு செய்துள்ளது.

தற்போது, DAP கட்சிக்கு 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MP), 81 மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் (ADUN) மற்றும் மேலவை எனப்படும் Dewan Negara-வில் ஏழு செனட்டர்கள் உள்ளனர்.

**அரசியல் நிகழ்வுகள்**

**2025 சபா மாநிலத் தேர்தல்**

17-ஆவது சபா மாநிலத் தேர்தலுக்கு வழிவகுக்கும் வகையில், சபா மாநிலச் சட்டமன்றம் 2025 அக்டோபர் 6ஆம் தேதி கலைக்கப்பட்டது. DAP எட்டுத் தொகுதிகளில் போட்டியிட்டது. வாக்குப்பதிவு 2025 நவம்பர் 29-ஆம் தேதி நடைபெற்றது.துரதிர்ஷ்டவசமாக, அந்த மாநிலத் தேர்தலில் DAP எந்தத் தொகுதியிலும் வெற்றி பெறவில்லை.

**2026 ஜொகூர் மாநிலத் தேர்தல்**

16-ஆவது ஜொகூர் மாநிலத் தேர்தலுக்கு வழிவகுக்கும் வகையில், ஜொகூர் மாநிலச் சட்டமன்றம் 2026 ஜூன் 1-ஆம் தேதி கலைக்கப்பட்டது. ஜொகூர் மாநிலச் சட்டமன்றத்தின் 17 தொகுதிகளில் DAP போட்டியிட்டது. வாக்குப்பதிவு 2026 ஜூலை 11-ஆம் தேதி நடைபெற்றது.ஜொகூர் மாநிலச் சட்டமன்றத்தில் DAP ஆறு தொகுதிகளில் வெற்றி பெற்றது.

**2026 நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தல்**

நெகிரி செம்பிலான் மாநிலச் சட்டமன்றம் 2026 ஜூன் 5-ஆம் தேதி அதிகாரப்பூர்வமாகக் கலைக்கப்பட்டது. வாக்குப்பதிவு 2026 ஆகஸ்ட் 1-ஆம் தேதி நடைபெற்றது. DAP 11 தொகுதிகளில் போட்டியிட்டு, ஒன்பது தொகுதிகளில் வெற்றி பெற்றது.

**மடானி அரசாங்கத்தில் DAP-இன் நிலைப்பாடு**

2025 டிசம்பரில், சபா மாநிலத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்ற மத்திய செயற்குழுவின் அவசரக் கூட்டத்தில், அடுத்த ஆறு மாதங்களுக்குள் சீர்திருத்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் காலக்கெடுவுக்குள் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், மடானி அரசாங்கத்தில் DAP வகிக்கும் நிலையை மறுபரிசீலனை செய்வது என்றும் மத்திய செயற்குழு முடிவு செய்தது.

மத்திய அரசாங்கத்திலிருந்து கட்சி விலக வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான தீர்மானம் கட்சிப் பேரவையில் முன்வைக்கப்படும். இது தொடர்பான இறுதி முடிவைக் கட்சிப் பிரதிநிதிகள் மேற்கொள்வார்கள்.

கட்சிப் பேரவை முதலில் 2026 ஜூலை 12-ஆம் தேதி நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், ஜொகூர் மற்றும் நெகிரி செம்பிலான் மாநிலத் தேர்தல்களில் முழுக் கவனம் செலுத்துவதற்காக அது 2026 ஆகஸ்ட் 16-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**தொடர்ச்சியான நிறுவனச் சீர்திருத்தங்கள்**

அமைச்சரவையில் DAP இடம்பெற்றிருப்பதன் மூலம், மடானி அரசாங்கம் பல்வேறு நிறுவனச் சீர்திருத்தங்களை முன்னெடுத்துள்ளது. பிரதமரின் பதவிக் காலத்தை வரையறுப்பதற்கான அரசியலமைப்புத் திருத்த மசோதா, அரசுத் தரப்பு வழக்கறிஞர் மற்றும் சட்டத்துறைத் தலைவரின் பதவிகளைப் பிரிப்பதற்கான அரசியலமைப்புத் திருத்த மசோதா, தகவல் சுதந்திர மசோதா ஆகியவை இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிறுவனச் சீர்திருத்தங்களில் அடங்கும்.

பிரதமரின் பதவிக் காலத்தைப் பத்து ஆண்டுகளாக வரையறுப்பதை நோக்கமாகக் கொண்ட அரசியலமைப்பு (திருத்த) மசோதா 2026 நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இருப்பினும், அதற்குப் போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. இதையடுத்து, அந்த மசோதா மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்துறைத் தலைவர் மற்றும் அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஆகியோரின் பணிகளையும் அதிகாரங்களையும் பிரிப்பதை நோக்கமாகக் கொண்ட அரசியலமைப்பு (திருத்த) மசோதா 2026 (எண் 2), 2026 பிப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர், DAP-இன் இரண்டு பிரதிநிதிகள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றச் சிறப்புத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அது அனுப்பப்பட்டது. அக்குழு ஓர் அறிக்கையைத் தயாரித்து, மசோதாவில் திருத்தங்களையும் மேற்கொண்டது. தற்போது, அந்த மசோதாவின் இரண்டாம் வாசிப்பு இன்னும் நடைபெறவில்லை.

தகவல் சுதந்திர மசோதாவின் முதலாம் வாசிப்பு 2026 ஜூலையில் நடைபெற்றது. பின்னர், DAP-இன் இரண்டு பிரதிநிதிகள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றச் சிறப்புத்

தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அது அனுப்பப்பட்டது. அந்த மசோதாவை ஆராய்ந்து, அதனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு, 2026 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்குழுவுக்கு மூன்று மாதக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

நாட்டின் நிர்வாக அமைப்பில் பல்வேறு மேம்பாடுகளையும் சீர்திருத்தங்களையும் ஏற்படுத்துவதற்காகக் கட்சி தொடர்ந்து போராடும்.

**DAP@60 மற்றும் முன்னோக்கிச் செல்லுதல்**

இந்த ஆண்டு DAP நிறுவப்பட்டதன் 60ஆவது ஆண்டு நிறைவாகும். இந்த ஆண்டு நிறைவை முன்னிட்டு, "மலேசியர்களுக்கான மலேசியா" (Malaysia untuk Rakyat Malaysia) என்ற கருப்பொருளைக் கட்சி முன்வைத்துள்ளது. ஒதுக்கப்பட்ட சமூகத்தினர், தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்களின் நலன்களைப் பாதுகாப்பதுடன், பன்முகத்தன்மையுடன் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் அடிப்படைப் போராட்டத்திற்கான கட்சியின் உறுதிப்பாட்டை இக்கருப்பொருள் பிரதிபலிக்கிறது.

DAP@60 கொண்டாட்டத்தின் கீழ், இந்த 60-ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்குப் பல்வேறு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. பல சவால்கள், துன்பங்கள் மற்றும் தடைகளைக் கடந்து வந்த கட்சியின் போராட்டப் பயணத்தைத் திரும்பிப் பார்ப்பதற்கான வாய்ப்பையும் இக்கொண்டாட்டம் வழங்குகிறது. எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலிருந்து ஆளுங்கட்சியாக உயர்ந்த பயணம்; ஒரு சிறிய கட்சியாக இருந்த நிலையிலிருந்து பிரதான அரசியல் நீரோட்டத்தில் இடம்பெறும் கட்சியாக வளர்ந்த பயணம் இது.

1966-ஆம் ஆண்டில் DAP நிறுவப்பட்டபோது கொண்டிருந்த அதே குறிக்கோளான கூட்டரசு அரசியலமைப்பைப் பாதுகாத்தல், நிலைநிறுத்துதல் மற்றும் மதித்தல் ஆகியவற்றால் இன்றும் கட்சி வழிநடத்தப்படுகிறது. பொருளாதார வளமை, ஜனநாயகச் சுதந்திரம், சமூகப் பொருளாதார நீதி, சமமான வாய்ப்புகள், சட்டத்தின் ஆட்சி, பன்மைத்துவத்திற்கான மரியாதை மற்றும் மனித மாண்பு ஆகியவை தொடர்பாக நமது கூட்டரசு அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு DAP தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது.

இறுதியாக, நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் DAP எப்போதும் பொருத்தமுடைய கட்சியாக நிலைத்திருப்பதுடன், மலேசியாவின் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களின் ஆதரவைத் தொடர்ந்து பெறுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.